தமிழ்நாட்டிற்கு வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நேற்று (23.1.2026) சென்னை விமான நிலையத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் பொன்னாடை அணிவித்து வரவேற்றார். இந்நிகழ்வின் போது தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், காவல்துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) ஜி.வெங்கடராமன், மற்றும் முக்கிய பிரமுகர்கள் உடனிருந்தனர்.

நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பாக திருவள்ளூர் மாவட்ட வேப்பம்பட்டு ரயில்வே கடவு எண் 14ல் ரூ. 44.55 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட மேம்பாலத்தை பொதுப்பணிகள் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்து சிறுபான்மையினர் நலம் மற்றும் வெளிநாடு தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முன்னிலையில் வாகன ஓட்டிகளுக்கு பயணங்களை தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் அரசு செயலாளர் இரா.செல்வராஜ், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், சசிகாந்த் செந்தில் எம்.பி, ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, தலைமை பொறியாளர் ச. ஜவகர் முத்துராஜ், ஒன்றிய செயலாளர் சே.பிரேம் ஆனந்த் உள்பட மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள், ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.1.2026) சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் நந்தனம் தலைமையக வளாகத்தில் 3.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மெட்ரோஸ் பூங்கா, பூப்பந்து மற்றும் பிக்கிள் விளையாட்டு மைதானங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, துணை மேயர் மு. மகேஷ்குமார், சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் எம்.ஏ. சித்திக், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

‘மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்’ தொடர்பாக – சட்டப் பேரவையில் நிறைவேற்றப்படும் ‘அரசினர் தனித் தீர்மானத்தை’

பிரதமரிடம் - எதிர்க்கட்சித் தலைவர் எடுத்துரைத்து வலியுறுத்துவார் என எதிர்பார்க்கிறேன்!

சட்டப்பேரவை விவாதத்திற்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலுரை!

சென்னை, ஜன.24-

சட்டப்பேரவையில், நேற்று, தாம் முன்மொழிந்த ‘100 நாள் வேலைத் திட்டம்’ குறித்த அரசினர் தனித் தீர்மானம் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றுகையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், “பிரதமர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைச் சந்திக்கும்போது, இதனை எடுத்துரைத்து வலியுறுத்துவார் என எதிர்பார்க்கிறேன்” என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் தொடர்பாக கொண்டுவரப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தில் உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்த பின்னர், இறுதியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நன்றி தெரிவித்து ஆற்றிய உரை வருமாறு:-

கூட்டாட்சித் தத்துவத்திற்குச் சவால் விடுகிற வகையிலும், ஏழையெளிய, பிற்படுத்தப்பட்ட விளிம்பு நிலையில் இருக்கின்ற மக்களுடைய சமூகப் பாதுகாப்பு தகர்ந்திடும் விதத்திலும் கொண்டுவரப்பட்டுள்ள ஒன்றிய அரசினுடைய இப்புதிய திட்ட நடவடிக்கைக்கு எதிராக, நமது அரசால் முன்வைக்கப்பட்ட அரசினர் தனித் தீர்மானத்தின் மீது, உறுப்பினர்கள் ஈ. ஆர். ஈஸ்வரன், முனைவர் ஜவாஹிருல்லா, கு.சின்னப்பா, கே.மாரிமுத்து, ம. சின்னத்துரை, மு.பாபு, ஜி.கே.மணி, கு.செல்வப்பெருந்தகை, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகியோர் தங்கள் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக முதலிலே அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குப் பிரதமர் அவர்கள் வருகிற காரணத்தால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அவரைச் சந்திக்கச் சென்றிருக்கிறார். இதே கருத்தை, அவர் பிரதமர் அவர்களைச் சந்திக்கும்போது எடுத்துச் சொல்வார் என்ற நம்பிக்கை இருக்கிறது. எப்படி எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், இந்தத் தீர்மானத்தின் மீது கருத்துகளை எடுத்து வைத்தாரோ, அதே அடிப்படையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பிரதமர் அவர்களிடத்திலே கருத்துகளை எடுத்து வைத்து, நிச்சயமாக வழிமொழிந்து பேசுவார் என்று நான் எதிர்பார்க்கிறேன். நான் மட்டுமல்ல; இங்கே இருக்கக்கூடிய நீங்களும் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறீர்கள். தமிழ்நாட்டு மக்களும் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசுகையில், ஏதோ ஒரு தோற்றத்தை உருவாக்கக்கூடிய வகையிலே இந்தத் தீர்மானம் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிறது என்ற ஒரு செய்தியை எடுத்துச் சொல்லி, அதைப் பதிவு செய்திருக்கிறார். ஆனால், கிராமப்புற மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அவர்கள் முதலிலே தெரிந்து கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

எது எப்படியிருந்தாலும், நான் அதைப் பற்றியெல்லாம் அதிகம் விமர்சனம் செய்ய விரும்பவில்லை. ஆனால், அதே நேரத்தில் குறை சொல்லி, ஏதோ ஒரு தோற்றத்தைக் கொண்டுவருவதாகச் சொல்லியிருந்தாலும், அதுவும் இங்கே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இருந்தாலும், நாம் கொண்டிருக்கக்கூடிய கொள்கையிலே ஏதோ உறுதியாக இருப்பதைப் போன்று தோன்றுகிறது. அப்படித் தோன்றக்கூடியதை உறுதி செய்யக்கூடிய வகையில் நிச்சயமாக பிரதமர் அவர்களிடத்திலே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொல்வார் என்ற நம்பிக்கையோடு, இந்தத் தீர்மானத்தை பேரவைத் தலைவர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இத் தீர்மானம் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து உரையாற்றினார்.

இதனையடுத்து – முதல்வர் அவர்கள் முன்மொழிந்த ‘அரசினர் தனித் தீர்மானம்’. பேரவையில் குரல் வாக்கெடுப்பின் மூலம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பிராட்வே பேருந்து முனையத்திற்கு மாற்றாக, துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தீவுத்திடலில் ரூ.8.44 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட தற்காலிக பேருந்து முனையத்தினை நேற்று (23.01.2026) பொது மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மாநகரப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் த.பிரபுசங்கர், வட்டார துணை ஆணையாளர் (வடக்கு), கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர், மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஒன்றிய பா.ஜ.க. அரசு

தமிழ்நாட்டிற்கு இழைத்துவரும் துரோகங்கள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் பட்டியலிட்டார்!

சென்னை,ஜன.24-

ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ் நாட்டிற்கு இழைத்து வரும் துரோகங்களை பட்டியலிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

Tamil Nadu counts the betrayals of NDA.

தேர்தல் சீசன் வந்தால் மட்டும், தமிழ்நாடு பக்கம் அடிக்கடி வரும் மாண்புமிகு பிரதமர் மோடி அவர்களே...

●தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய 3,458 கோடி ரூபாய் Samagra Shiksha கல்வி நிதி எப்போது வரும்?

●தொகுதி மறுவரையறையில் (Delimitation) தமிழ்நாட்டின் தொகுதிகள் குறைக்கப்படாது என்ற உறுதிமொழி உங்கள் வாயில் இருந்து எப்போது வரும்?

● பா.ஜ.க.வின் முகவர்போல் செயல்படும் ஆளுநரின் அராஜகம் எப்போது முடிவுக்கு வரும்?

●தமிழ்ப்பாசத்தில் தமிழர்களை மிஞ்சியதாய்க் காட்டிக்கொள்ளும் உங்கள் அரசிடம் இருந்து தமிழுக்குரிய நிதி ஒதுக்கீடு எப்போது வரும்?

● “MGNREGA தொடரும், மாநிலங்கள் மீது நிதிச் சுமையை ஏற்றி ஊரக மக்களின் வாழ்வாதாரத்தை ஒழித்துக் கட்டும் VBGRAMG கைவிடப்படும்" என வாக்குறுதி எப்போது வரும்?

● பத்தாண்டுகளாக ‘இன்ச் இன்ச்’சாக ஒன்றிய பா.ஜ.க. அரசு இழைத்து வரும் மதுரை AIIMS எனும் எட்டாவது உலக அதிசயம் எப்போது எங்கள் கண்முன் வரும்?

● இயற்கைப் பேரிடர்களுக்காக நாங்கள் கேட்ட நிவாரணத் தொகை எப்போதுதான் வரும்?

●ஓசூர் விமான நிலையம், கோவை மற்றும் மதுரை மெட்ரோ திட்டங்களுக்கு எப்போது ஒப்புதல் வரும்?

● கீழடி அறிக்கை எப்போது வெளியே வரும்?

● ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களின் ஒருமனதான கோரிக்கையான NEET விலக்கு எப்போது அமலுக்கு வரும்?

தொடர்ந்து துரோகங்களை மட்டுமே செய்யும் பா.ஜ.க. கூட்டணிக்குத் தமிழ்நாடு எப்போதுமே தோல்வியைத்தான் தரும்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது பதிவில் பட்டியலிட்டுள்ளார்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

காஞ்சிபுரத்தில் மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் மாபெரும் பொதுக்கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜன.24-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில மொழிப்போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் 25.1.2026-ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு காஞ்சிபுரத்தில் நடைபெறுகிறது.

இம் மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர்-முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறேன். மாவட்ட அவைத் தலைவர் ச.இனியரசு, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஓ.எஸ்.தினகரன், மலர்விழி குமார், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்டக் கழக துணைச் செயலாளர் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., கழக கொள்கைபரப்பு செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப்துல்மாலிக், மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், செம்பருத்திதுர்கேஷ், ஆர்.டி.அரசு, எம்.எஸ்.சுகுமார், டி.ஆர்.நாராயணன், எஸ்.ஆர்.அப்பாதுரை, கு.குமார், பி.எம்.குமார்,பி.எம்.பிரபு, கெ.ஞானசேகரன், டி.குமார்,க.குமணன், பி.சேகர்,கே.கண்ணன்,ஜி.தம்பு, பி.எச். சத்தியசாய், பொன். சிவக்குமார், டி.வீ.கோகுல கண்ணன், வி. ஏழுமலை, இ.சரவணன்,ஏ.சிற்றரசு,எம்.எஸ்.பாபு, கே.எஸ்.ஆர். கார்த்திகேயன், எஸ்.சந்துரு, கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன், என்.எஸ். பாரிவள்ளல், என். பாண்டியன்,டி.மோகன்தாஸ்,வி.டி. ஆர். வி.எழிரலசன்,ஆ.சுந்தர மூர்த்தி, ஜி.சுகுமாறன்,தி.அன்பழகன்,

ப.சுந்தரவரதன், வி.எஸ். ராமகிருஷ்ணன், வே.ஏழுமலை, எஸ்.டி.பிரேம்சந்த், எஸ்.உசேன்,எஸ்.கே.ராஜேந்திரன்,என்.கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி, பி.சசிகுமார், எழிலரசி சுந்தரமூர்த்தி, நித்யாசுகுமார்,ஆர்.கே. தேவேந்திரன், மலர்கொடிகுமார், ஹேமலதாஞானசேகரன்,சாந்தி இராமச்சந்திரன், இல்லாமல்லி, நந்தினிகிரிகாலன், கோ. தசரதன், எஸ். மோகன்,சாந்தி சீனிவாசன், சசிகலாஆறுமுகம்,சம்யுக்தா அய்யனார்,அ.யுவராஜ், எஸ். குணசேகரன், எஸ்.எம்.ஜயாவுதீன், கே.அப்துல்நபீல், டாக்டர் வி.திவாகர், பி.கார்த்திகேயன், ஏ.நூருல்அமீன், ஆர்.இரங்கநாதன், வி.புருஷோத்த மன், கே.நாகராஜ், ஏ.என்.பாரத், நாத்திகம் நாகராஜன், எஸ்.கண்ணதாசன், ஏ.செல்வி, எஸ்.மாலதி, ஆ.சசிகுமார், டி.எஸ்.ரமேஷ், சி.பி.ராதாகிருஷ்ணன், வி. மலர்மண்ணன், இ.அசோகன்,டி.வெங்கட்ராமன்,டி. ஜெய் கணேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பி க்கின்றனர்.

காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ் செல்வன் நன்றி கூறுகிறார்.

எனவே காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் தலைமையில் நேற்று (23.01.2026) சென்னை மின்வாரிய தலைமை அலுவலகத்தில், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகத்தின் சார்பில் தமிழ்நாட்டில் மேற்கூரை சூரிய மின் உற்பத்தியினை ஊக்குவிக்கும் பொருட்டு ”வீட்டுக்கொரு சோலார் திட்ட பரப்புரை துவக்கம். புதிய மேற்கூரை சோலார் வழிகாட்டி மென்பொருள் கருவி (Rooftop Solar explorer) RTSE பயன்பாடு மற்றும் ”தமிழ்நாடு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் நில இணையதளம் ஆகியவற்றை தொடங்கி வைத்தார்கள். உடன் தமிழ்நாடு மின்வாரிய தலைவர் டாக்டர். ஜெ. ராதாகிருஷ்ணன், எரிசக்தி துறை செயலாளர் (மு.கூ.பொ.) மங்கத்ராம் சர்மா, தமிழ்நாடு பசுமை எரிசக்திக் கழக மேலாண்மை இயக்குநர் மரு. அனீஷ் சேகர். தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர் ம. கோவிந்தராவ், மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.